# இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல்

## ஆண்டறிக்கை -2020/ 2021

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | இலங்கையின் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகளை ஆவணப்படுத்தல் |
| செயற்றிட்ட எண் | NF/PG/2020/0004 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 - மார்கழி 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நூலக நிறுவனம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | சரவணன் நடராசா, ஞானம் பாலச்சந்திரன், மயூரநாதன் இரத்தினவேல், செல்வமனோகரன், எழுத்தாளர்கள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |

நூலக நிறுவனம் 1925 க்கு முன் இலங்கையில் வெளிவந்த தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஆக்கங்களைப் பட்டியலிட்டு, பாதுகாத்து, அணுக்கப்படுத்துவதை முன்னெடுப்பதற்காக "தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான பழைய படைப்புகள்" செயற்திட்டத்தை முன்னெடுக்கிறது. அண்மைக் காலமாக இலங்கையில் வெளியிடப்பட்ட பல படைப்புகள், படைப்புகள் பற்றிய தகவல்கள் archive.org, hathitrust.org போன்ற செயற்திட்டங்கள் ஊடாக பொதுவில் கிடைக்கத் தொடங்கியுள்ளன. மேலும், நூலக நிறுவனம் பங்கெடுத்த " யாழ்ப்பாண புரட்டஸ்தாந்து டிஜிட்டல் நூலகம்" (jaffnapdl.org) ஓர் ஊக்கியாக அமைந்தது. அவற்றை மையமாகக் கொண்டு

- இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பில் தற்போது கிடைக்கும் படைப்புக்களும், கிடைக்காத படைப்புக்களும் தேடுவதற்கான ஓர் ஊக்கியாக இச்செயற்றிட்டம் ஊடாக 1900 களுக்கு முற்பட்ட ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு மின்வருடப்பட்டும் , மென்கோப்பு வடிவிலும் நூலக வலைத்தளத்தில் இணைக்கப்பட்டன.

இச்செயற்றிட்டம் நூலக நிறுவனத்தினால் 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது அதனூடாகா கிழ்வரும் பணிகள் முழுமைப்படுத்தப்பட்டன. அவற்றுடன் தொடர்ந்து நூலக நிறுவனத்தின் ஓர் தொடர் செயற்றிட்டமாக இது தொடரப்பட்டு வருகின்றது.

செயற்றிட்ட அடைவுகள்

- ஆய்வு சார்ந்து 04 கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.
- 1990 களுக்கு முற்பட்ட ஆவணங்களை ஒரு தளத்தில் கொண்டுவருவதற்காக வலைவாசல் உருவாக்கப்பட்டது. வலைவாசல்
- காலம் (1600 க்குமுன்), (1600 - 1700), (1700 - 1800), (1800 - 1900) வடிவம் (நூல்கள், அறிக்கைகள், பாடநூல்கள், கட்டுரைகள், பத்திரிகைகள், இதழ்கள், ஆய்விதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வேடுகள்) விடயம் (சமயம், வரலாறு, மொழி, இலக்கியம், நிர்வாகம், மருத்துவம், பிற) இவ்வகையான உள்ளடக்கங்களைக் கொண்டு வலைவாசல் உருவாக்கப்பட்டது.
- மூல நூல் தேடல் என்ற வகையில் ஞானம் பாலச்சந்திரன், மயூரநாதன், செல்வமனோகரன் மற்றும் சரவணன் ஆகியோரினால் நூற்கள் மென்வடிவில் வழங்கப்பட்டதுடன் ஆவணங்களை பெறுவதற்கான முன்மொழிவுகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.
- மீதரவு உருவாக்கல்
- நூலக நிறுவனத்தின் எண்ணிம நூலகத்தில் சேர்த்தல்
- மார்க் அவர்களால் முன்னெடுக்கப்பட்ட EAP835, EAP971 ஆகிய செயற்திட்டங்களின் மீதரவுகள். இச்செயற்றிட்டத்துனுள் பகிரப்பட்டன.
- 3339 ஆவணங்கள் பெறப்பட்டன. அவற்றுள் 437 ஆவணங்கள் மீதரவு இற்றைப்படுத்தலுடன் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டன.(2020 செப்டம்பர் தொடக்கம் 2021 டிசம்பர் வரையான காலப்பகுதியில் )

எதிர்கொண்ட சவால்கள்

- ஆவணங்கள் பெறுவதற்கான தேடல் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருந்தது. குறிப்பாக சிலரால் மட்டும் அனுப்படும் ஆவணங்களை பதிவேற்றல் நிகழ்ந்தமை.
- ஆவணங்களை பெறுவதற்காக தனியொரு பணியாளர் இன்மையும். 10% பணியாகவும் இவை மட்டுப்படுத்தப்பட்டமை. அதனால் பொறுக்கூறல் தன்மை குறைவாக காணப்பட்டது.
- பணியாளரின் தேவை உணரப்பட்டும் போதியளவு நிதியினை ஒரு சவாலாகக் காணப்பட்டது.
- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இத்திட்டத்திற்கான ஊழியர் நியமிக்கப்படலாம் மூழுநேரமாக 1900 களுக்கு முற்பட்ட ஆவணங்கள் தொடர்பான ஆய்வுகள் விடயப்பரப்புகள் சார்ந்து பணியாற்ற திட்டமிடலாம்.
- ஆவண வழங்குநர்களின் பட்டியலை விரிவுபடுத்தல்.
- தன்னார்வலர்களை இணைத்து ஏனைய பிராந்தியம் விடயங்களை உளீர்க்க முடியும்.
- ஏனைய செயற்றிட்டங்களுக்கூடாக வரும் 1900 களுக்கு முற்பட்ட ஆவணங்களை இச்செயற்றிட்டதுலும் இணைக்கலாம்.

பின்னிணைப்பு

முன்னோர் ஆவணகம்